# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) - 2008 / 2009
## HELD IN AUGUST - 2009

## TML 3.11 – HISTORY OF TAMIL LITERATURE FROM SANGAM TO VIJAYA NAGAR RULE

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. சங்ககால அகத்திணை, புறத்திணை மரபுகளை அக்காலத்தெழுந்த இலக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு விளக்குக.

02. "பத்துப்பாட்டு நூல்களுள் ஆற்றுப்படை இலக்கியங்கள் தனித்துவமான இலக்கிய மரபினைக் கொண்டவை" பரிசீலிக்குக.

03. சங்கமருவிய காலத்தில் எழுந்த திருக்குறள், நாலடியார் முதலான நூல்களில் அறக்கருத்துக்கள் வற்புறுத்தப்படுமாறு குறித்து தெளிவுபடுத்துக.

04. பல்லவர் காலத்து பக்தி இலக்கியங்கள் பிற்காலத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு வழிகோலியவற்றை ஆதாரங்களுடன் விளக்குக.

05. "பல்லவர் காலத்து இலக்கிய கர்த்தாக்கள் சங்க கால அகத்திணை, புறத்திணை பொருள் மரபுகளைத் தத்தம் நோக்கிற்கேற்பக் கையாண்டபோது புதிய இலக்கிய வடிவங்கள் பல தோன்றலாயின." அலசுக.

06. சோழப் பேரரசர் காலத்தில் எழுந்த சிற்றிலக்கியங்களை வகைப்படுத்தி, அவை அக்கால அரசியல், சமூக, சமய நிலைமைகளில் வெளிப்பாடாகத் திகழுமாற்றை விளக்குக.

07. சோழப் பேரரசர் காலத்து பெருங்காப்பியங்களின் தனித்துவமான பண்புகளைத் துலக்குக.

08. "விஜய நகர நாயக்கர் காலத்தில் அடிநிலை மக்கள் தொடர்பான இலக்கியங்கள் முனைப்புப் பெறலாயிற்று" அக்கால பள்ளு, குறவஞ்சி போன்ற இலக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

***